**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 68/2025**

**PW - 1**

| | | |
|---|---|---|
| Name | : | பாலு ( LW. 1 ) |
| Father's / Husband Name | : | த/பெ.கருப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:-**

1) நான் தற்போது தில்லைபுரம் நாமக்கல்லில் குடியிருந்து ஸ்ரீநிதி ரோடுவேஸ் என்ற பெயரில் டிரான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறேன். ஸ்ரீ சக்தி மற்றும் ஸ்ரீ காயத்திரி என்ற பெயரில் இயங்கி வரும் பைனான்ஸ் நிறுவனத்தில் மொத்தம் 17 நபர்கள் பங்குதாரர்களாக உள்ளோம், அதில் நான் ஒருவர் ஆவேன். மேற்படி ஸ்ரீ காயத்திரி பைனான்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் நான் ஆவேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 10 வருடங்களுக்கு முன்னர், தேதி, மாதம் நினைவில்லை, ஆஜர் எதிரி ஸ்ரீ காயத்திரி பைனான்ஸ் நிறுவனத்தில் தனக்கு சொந்தமான 10 சக்கர டாரஸ் வாகனத்தை அடமானம் வைத்து கடன் கேட்டதன் பேரில் ரூ.9,00,000/- கடனாக வங்கி வாயிலாக கொடுத்தோம். **மேற்படி எங்கள் வங்கியான பாரத ஸ்டேட் வங்கியில் இருந்து எதிரியின் வங்கியான பஞ்சாப் நேசனல் வங்கி கணக்கிற்கு கடன் கொடுக்கப்பட்டதற்கான எங்கள் வங்கி கணக்கின் பற்று வரவு அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அது குறித்து எதிரி அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்தார். **மேற்படி அடமானக்கடன் பத்திரம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்த Hire Purchase Agreement Forms Book அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2, 3 மாதங்கள் மட்டும் எதிரி கடனை சரியாக செலுத்தினார். **எதிரி எங்கள் நிறுவனத்திற்கு தவணைக்கட்டியதற்கான தவணை ரசீதுகள் நகல் அ.சா.ஆ.4 (எண்ணிக்கை - 5) ஆக குறியீடு**

**செய்யப்படுகிற**து. பின்னர் எதிரி வண்டியுடன் தலைமறைவு ஆகிவிட்டார். அதன் பிறகு வழக்கு புகாரினை நான் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி **புகார் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) எதிரி தான் வாங்கிய கடன் முழுவதையும் எங்கள் நிறுவனத்திற்கு கொடுத்து தீர்த்துவீட்டார் என்றால் சரி. தற்போது அவர் நிலுவைத்தொகை எதுவும் கட்டத்தேவையில்லை என்றால் சரி. அவருக்கு எதிராக வழக்கு நடவடிக்கை எதுவும் தொடரவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மறு விசாரணை – இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 68/2025**

**PW - 2**

| | | |
|---|---|---|
| Name | : | வரதராஜன் **( LW. 2 )** |
| Father's / Husband Name | : | த/பெ.ராஜகோபாலன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**(எதிரி ஆஜர்)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது ஆண்டவர் நகர், திருச்சிரோடு, நாமக்கல்லில் குடியிருந்து திருச்சி ரோட்டில் உள்ள ஸ்ரீ காயத்திரி பைனான்ஸில் மேலாளராக பணியாற்றி வருகிறேன். மேற்படி எங்கள் நிறுவனத்தில் ஆஜர் எதிரி லாரியை அடமானம் வைத்து கடன் கேட்டதன் பேரில் ரூ.10,71,000/– கடன் வாங்கியிருந்தார். கடனை வங்கி வாயிலாக கொடுத்தோம். 2, 3 மாதங்கள் மட்டும் எதிரி கடனை சரியாக செலுத்தினார். பின்னர் எதிரி வண்டியுடன் தலைமறைவு ஆகிவிட்டார். அதன் பிறகு புகாரினை கொடுத்த பிறகு எதிரி பணம் முழுவதையும் செலுத்திவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) எதிரி தான் வாங்கிய கடன் முழுவதையும் எங்கள் நிறுவனத்திற்கு கொடுத்து தீர்த்துவிட்டார் என்றால் சரி. தற்போது அவர் நிலுவைத்தொகை எதுவும் கட்டத்தேவையில்லை என்றால் சரி.

**மறு விசாரணை – இல்லை.**